**களனி ஆற்றிற்கு மேலாக பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டம் - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

களனி ஆற்றிற்கு மேலாக பாலம் நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மார்ச் 28 ஆந் திகதிய SLP III ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றித்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதைய நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சான துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுல்படுத்தல் முகவராகவும் காணப்படுகின்றன. கொழும்பு நகரத்தில் போக்குவரத்து வலையமைப்பை மேம்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுவதற்குப் பங்களிப்பதற்காக களனி ஆற்றின் குறுக்கே ஒரு புதிய பாலத்தை உயர் இயக்க இணைப்பாக நிர்மாணிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலைத் தணித்தல் மற்றும் நீக்குதல் இச்செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 55,313 மில்லியனுக்குச் சமமான யப்பானிய யென் 41,429 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 46,755 மில்லியனுக்குச் சமமான யப்பானிய யென் 35,020 மில்லியன் தொகையினை நிதியீட்டம் செய்வதற்கு யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இணங்கியிருந்தது. எஞ்சிய தொகையான ரூபா 8,558 மில்லியனை நிதியீட்டம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூலை 01 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | சேயற்திட்டத்தின் சிவில் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்த காரர்களிற்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 58.97 மில்லியன் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | முடிவுறா வேலை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதி குறைத்துக் கூறப்பட்டிருத்தல் | முன்னைய ஆண்டிற்கு ரிய செலவினம் முடிந்த வரை கிடைக்கக்கூடிய ஆவணச் சான்றுகளாக சேகரிக்கப்பட்டு அட்டு றுக் கட்டணங்களாக கணக்கீடு செய்யப்பட் டன. | மீளாய்வாண்டின் இறுதியில் காணப் படும் செலுத்தப்பட வேண்டியவைக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | குடிபெயர்ந்த ஆட்களிற்கான வதிவிட நோக்கத்திற்காக செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு 2017 ஏப்ரல் 17 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த கட்டிடம், தொடர்ச்சியாக முடிவுறா வேலையின் கீழ் | -மேற்படி- | பாதிக்கப்பட்ட தரப்பி னரை மீளக்குடியமர்த் துதல் செயற்திட்டச் செயற்பாடாகக் கருதப்ப ட்டு சொத்துக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கைய ளிக்கும் வரை | சொத்துக்களின் ஆயுட்காலத்தின் அடிப்படையில் தனிப்பட்ட சொத் தாக இனங்காணப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்டிருந்தது. | | முடிவுறா வேலைகளின் கீழ் வைக்கப்படுகின்றது. |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டச் செயற்பாடுகளின் பௌதீகச் செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களனி ஆற்றின் குறுக்கே தற்போதுள்ள பாலத்திற்கு இணைந்ததாக 06 போக்குவரத்து வழிகளுடன் கூடிய புதிய பாலத்தினதும் மேலதிக மேம்பாலமொன்றையும் உருக்குப் பாலமொன்றையும் நிர்மாணிக்கும் 02 ஒப்பந்தங்களின் கீழான கொழும்புத் துறைமுக நுழைவுப் பாதையினதும் நிர்மாண வேலைகள், 2017 இன் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகளில் பூரணப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2018 திசெம்பர் 31 இல் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட முறையே 38.35 மற்றும் 11.16 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத்திற்கு எதிராக அத்திகதியில் உள்ளவாறு அடையப்பட்டிருந்த பௌதீகச் செயன்முன்னேற்றம் முறையே 31.14 மற்றும் 10.07 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே 2014 மார்ச் 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி, தற்போதுள்ள மின்கடத்தல் வழிகளை நிலத்திற்குக் கீழான கேபல் வழியாக மாற்றி அவற்றை ரூபா 1,240 மில்லியன் கிரயத்தில் 2016 திசெம்பர் 31 இல் பூரணப்படுத்துதல் வேண்டும். இருப்பினும், 2018 திசெம்பர் 31 உள்ளவாறு 02 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், குறித்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | தலைக்கு மேலான உயர் வோல்டேஜ் மின்கம்பி வழிகளை மாற்றியமைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்த காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முற்பண உத்தரவாதப் பிணைமுறி 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி காலாவதி யாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதனைப் புதுப்பிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிலுவையினை அறவிடுவதில் ஆபத்து காணப்படுதல் | புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தரவாதப் பிணைமுறி யினைப் புதுப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | விபரமான வடிவமைப்புக் கட்டத்தில் இனங்காணப்படாத கொழும்பு – கட்டுநாயக்க | பாலத்தினை நிர்மாணிப்பதற்கான மேலதிகக் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை | மேலதிகக் கிரயத்தை தவிர்ப்பதற்காக அனைத்து சாத்தியமான |

| | | | |
|---|---|---|---|
| அதிவேக நெடுஞ்சாலையில் கிரயம் வாகனங்கள் பயணிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக மாற்றுப்பாதைக்காக ரூபா 463 மில்லியன் மேலதிகச் செலினம் செய்யப்பட்டிருந்தது. | | | மாற்றுவழிக ளும் ஆராயப்படுதல் வேண்டும். |

### 3.3 அசாதாரணச் செயற்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| குடிபெயர்ந்த ஆட்களை குடியமர் த்துவதற்காக ரூபா 6 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப் பட்டிருந்த 03 வீடுகள் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப் படாது அலுவலகத் தேவைகளிற் காகப் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்த்த குறிக்கோள் அடையப்பட்டிருக்காமை | அங்கீகரிக்கப்பட்ட மீளக்குடியமர் த்தல் செயல்நடவடிக்கைத் திட்ட த்தில் மீளக்குடியமர்த்தல் வேலை கள் குறித்துரைக்கப்பட்டிருந்த மையால் அவசர வேலைகளை மேற்கொள்வதற்காக தற்போது எஞ்சிய 03 வீடுகளும் அலுவலக மாகவும் ஏனைய செயற்பாட்டுத் தேவைகளிற்காகவும் பயன்படுத் தப்படுகின்றன. | வீடுகள் உரிய நோக்கத் திற்காகப் பயன்படுத்தப் படுதல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

செயற்திட்டப் பொறியியலாளர், அளவுத்திட்ட ஆய்வாளர் மற்றும் 04 வேலைத்தள பொறியியலாளர்கள்/தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்ற பிரதான முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டுப் பதவிகள், செயற்திட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் வெற்றிடமாகக் காணப்பட்டன.